# திருநாமப்பதிகம்



அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்
பூமகள்விலாச அச்சுக்கூடம்
நெ-24, தாண்டவராயப்பிள்ளைவீதி, சென்னை.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



# தனியன்கள்

ஸ்ரீஸைலேஸதயாபாத்ரம் தீபக்த்யாதி
குணர்ணவம், யதீந்த்ரப்ரவணம்வந்தே ரம்ய
ஜாமாதரம்முநிம்.

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்ய
மாம், அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே
குருபரம்பராம்.

யோ நித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததி தராணித்ருணாயமேநே
அஸ்மத்குரோர்பகவதோஸ்ய தயைகஸிந்தோ
ராமாநுஜஸ்யசரணௌஸரணம்ப்ரபத்யே.

மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதிஸ்
ஸர்வம்யதேவ நியமேநமதந்வயாநாம்
ஆத்யஸ்யந: குலபதேர்வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம்ப்ரணமாமிமூர்த்நா.

பூதம்ஸரஶ்சமஹதாஹ்வயபட்டநாத
ஸ்ரீபக்திஸாரகுலஶேகரயோகிவாஹாந்
பக்தாங்க்ரிரேணுபரகாலயதீந்த்ரமிஶ்ராந்
ஸ்ரீமத்பராங்குஶமுநிப்ரணதோஸ்மிநித்யம்

குருமுகமநதீத்ய ப்ராஹவேதாநஶேஷாந்
நரபதிபரிக்லுப்தம் ஶுல்கமாதா துகாமஃ
ஶ்வஶுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்யசாக்ஷாத்
த்விஜகுலதிலகந்தம்விஷ்ணுசித்தம்நமாமி

## நேரிசை வெண்பா

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூ
ரென்றொருகால், சொன்னார்கழற்கமலம்
சூடினோம்-முன்னாள், கிழியறுத்தானென்
றுரைத்தோம் கீழ்மையினிற் சேரும், வழிய
றுத்தோம் நெஞ்சமே வந்து.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான்
வந்தானென்று, ஈண்டியசங்கமெடுத்தூத-
வேண்டிய, வேதங்களோதி விரைந்துகிழி
யறுத்தான், பாதங்கள்யாமுடையபற்று.

தனியன்கள் ஸம்பூர்ணம்.

ஸ்ரீ

# திருநாமப்பதிகம்

பன்னிருசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

ஆதிபரஞ்சோதியா யண்டபகி ரண்டமா
யநாதியாய் நின்றநாமம், அடிமுடியி னடு
வாகி எளியவன் களிகூற வன்புவைத் திரு
ந்தநாமம், நீதிநெறி யாகவே மணிபூரகந்
தனில் நிலையாக நின்றநாமம், நேசமுட
னே கருடவாகனமீதேறியே நின்று விளை
யாடுநாமம், வீதிவெளியாகவே யுச்சிமலை
மீதினில் விளக்கொளியில் நின்றநாமம்,
மேலாம்பதத்தையும் நாலாம் பதத்தையும்
விளங்கக்கொடுக்குநாமம், நாதாந்தபேரொ
ளியதாகவே விளங்கிடுநமோநமோவென்ற
நாமம், நாராயணா ஹரிகோவிந்தாவென்று
தினம் நாடிவரு திருநாமமே. 1

ஹரிநமோ வென்றுரைப் போர்க்குமே
பாண்டவர்க்கருவாகி நின்றநாமம், அருச்சு
னர்க்காகவேகதிரோனைமறைத்துநல்லரசு
நிலை வைத்தநாமம், பரிவான கிருஷ்ணாவ

தாரத்திற்பூதகி பருத்தமுலை யுண்டநாமம், பாரினில் கல்லினை மிதித்துப் பெண்ணாக வேபண்பருள்புரிந்தநாமம், திருமேவுபிரக லாதனன்றனக்காகநரசிங்கமுகமான நாமம் தேவாதிதேவரை யிடுக்கண்வைத் தோர்க ளைத் திறைகொண் டிருந்தநாமம், கருவாகி யுருவாகி திருவாகி மருவாகிக் காட்சிதந் திட்டநாமம், கரியீச பிரகாச திருநேச பர வாச கருணைதரு திருநாமமே. 2

முன்னாளிலே சிவன் றிருக்கையிற் பாண மாய் முப்புரமெரித்தநாமம், முதலைவாய் சிக்கிய மதகரிக் கந்நாளிலாதி மூலமாய் நின்றநாமம், பொன்னான ருக்மணி தேவி கல்யாணத்திற் போராய்த் துலைத்த நாமம், பூதப்பிசாசு பில்லிசூனியமுதல் யாவுமே பொய்யாக்கிவிட்ட நாமம், சின்னபின்னங்க ளாயிராவணன்சிரசினைத்திட்டமுடனரிந்த நாமம், சிரஞ்சீவியாகவே விபீஷணன்றனை க்குமே ஜெயபட்டமீந்தநாமம், கன்னிவய தாகவே கருணைசமுத்ரத்திற் காட்சிதந்த ருளுநாமம், கரியீசபிரகாச திருநேச பர வாச கருணைதரு திருநாமமே. 3

எண்ணிரண்டாயிர மிடையர்தம் மாத ருக் கிறையாயிருந்தநாமம், இகலோக பர லோக சொர்க்க லோகமுழுத லேகமாய் நின்றநாமம், மண்ணுக்கும் விண்ணுக்கு மொன்ருன மாவலியை வன்சிறையில் வை த்தநாமம்,மராமரமொருகணேயி லுருவவே தொட்டன்று வாலியை வதைத்த நாமம், ஒன்றிற்கு மைந்திற்கும் உண்மையது வாக வேவுந்தியி லுதித்தநாமம்,ஓம்நமோ நாரா யணுபரந்தாமாவென ஓதவே நின்றநாமம், கண்ணுக்கும் நாசிக்கும் நடுவாகவே நின்று காட்சியே தந்தநாமம், கரியீசபிரகாச திரு நேச பரவாச கருணைதரு திருநாமமே. 4

சிலைதனை வளைத்தபின் ஜனகன்மகளான சீதையைமணந்தநாமம்,திருவரங்கேசராய்க் காவேரி வாசராய்த் திருச்சனனமான நாமம், கலையினை யுரிந்திட்ட பாண்டவர்கள் மனைவிக்குக்கருணை தந்திட்டநாமம், காலி கடிரண்டிடக் கானகந்தன்னிலே காவலாய் நின்றநாமம், மலைதனைச்சுமந்தன்று கோக் களினமாளாமல் வருணனைத்தடுத்தநாமம், மாரீசன்பின்னே திரிந்து மிருகூராக மா

னையேயெய்தநாமம், நிலையாதசூரனை வரா
கவவதாரமாய் நின்றன்று கொன்றநாமம்,
நீலமேகத்தைநிகர் காயாம்பூ வண்ணனெ
னுநெடியவன் றிருநாமமே. 5
சாலோக சாமீப சாரூப மாகவே சாயுச்
சியமானநாமம், சகலகலை வேதப்புராணங்
களுக்கெல்லாம் தயாபரமதானநாமம், பூ
லோக புவலோகபாதாளமீதிலே புண்ணி
யமளித்தநாமம்,புவனமதுதன்னிலே நாலா
றதென்னவே புராணகலை யானநாமம், ஆ
லோலமாகவே யண்டங்களாயிரத்தெட்டா
யளந்தநாமம், அங்குளோ ரிங்குளோ ராக
வேயாவர்க்குமறிவிக்கவந்தநாமம், பரலோ
கமாகவேபன்னகசயனத்தில்பள்ளிகொண
டிட்டநாமம், பரவாச குருவீச திருநேச
பிரகாச பகவனது திருநாமமே. 6
சுழியான முனையிலேசூக்ஷாதிசூக்ஷமாய்ச்
சொல்லியே நின்றநாமம், சொல்காவிபங்
களுக் குபசாரமாகவே சொல்லிவிக்கவந்த
நாமம், வெளியான வெளியிலே மேலான
வீட்டிலே மீதங்கிருந்தநாமம், வித்தாரமா
கவேயுத்தாரமோதவேவித்தாரமானநாமம்

ஒழியாததேகமதெடுத்தாலுமுன் செயலுதவி
யாய் நின்றநாமம்,உள்ளூற்றசோதியாய்வெ
ள்ளூற்றகாதலாயுள்ளத்தி நின்றநாமம்அழி
யாதபதவியை யீந்தென யெந்நாளுமடிமை
கொண்டிட்ட நாமம்,ஹரிநமோ நாராயணு
வென்றுரைப்பவர்க்கரியபெருதிருநாமமே.

தானுந்தன் பாதமூஞ் சேத்துமம்வருங்
காலத்தற்காத்தேயருள்செய் நாமம்,சந்திரன்
செல்வாழ்வுதொலையாதபாக்கியஞ் சார்ந்து
ரட்சிக்குநாமம், தேனந்தமாகவே திருநாம
போதந் தரிசிக்கவந்தநாமம், திருவவதார
மாய்த்தாசானுதாசனுய்ச்செகதலம்பரவுநா
மம்,ஆனந்தமாகவே ஓங்காரகம்பமா யுள்
ளூருகி நின்றநாமம், உல்லாசமாகவே மூவ
கைத் தோத்திரமே மூயிராகி நின்றநாமம்,
ஆனந்தமாகவேயணுவுக்குமணுவாகிபசை
வாகி நின்றநாமம்,ஹரிநமோ நாராயணுவெ
ன்றுரைப்பவர்க்கரிபெருதிருநாமமே. 8

செய்யாதபாவங்கள் செய்தாலு நீக்கிடும்
ஸ்ரீராம வென்றநாமம், தீராத வல்பிணி
கள் மாருத துன்பங்கள் தீர்த்துரட்சிக்குநா
மம், பொய்யானகாமப் பெருங்கடல்வீழ்த்

தாது புன்பிறவி தீர்க்குநாமம், புண்டரீகாட்சனைக் கண்டுசேவிக்கவே புன்முறுவல் செய்யுநாமம், மெய்யான கிருபைதருவைகுந்தவாழ்வினை வீருயளிக்குநாமம், மெய்ஞ்ஞான வழிதந்தே யஞ்ஞானம் நீக்கியே மேன்மைதனையீயுநாமம், நையாமலேதினமும் நம்பினேனென்றவரை நாடிரட்சிக்குநாமம், நாராயணுஹரிகோவிந்தா வென்று நாடிவரு திருநாமமே. 9

ஸ்ரீங்காரமாகவே நூற்றெட்டு திருப்பதிசிறந்தோங்கி நின்றநாமம், தினந்தினமிராமவென் றுரைப்பவர்கள் சிந்தையுட்சிறப்புற்றிருக்குநாமம், நீங்காமலெந்நாளுமதி கதிர்விளக்கமாய் நிரம்பியே நின்றநாமம், நிஜநித்யமானதொரு பரசத்திய வாசமாய் நிறைவுற் றிருந்தநாமம், பாங்கான பேருடன் வாங்காமலேதினம் பண்பினைக் கொண்டநாமம், பச்சைமாலச்சுதா னந்தகோவிந்தனெனப்பரவுதற்கரியநாமம், ஆங்காரமாகவே திருநாமமலையிலன்புவைத்திருந்த நாமம்,ஹரிநமோநாராயணு வென்றுரைப்பவர்க்கரியபெரு திருநாமமே. (முற்றிற்று)

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1939.

# தமிழ் வருஷங்கள் 60

| | | |
|---|---|---|
| பிரபவ | ஸர்வஜித்து | பிலவங்க |
| விபவ | ஸர்வதாரி | கீலக |
| சுக்ல | விரோதி | ஸௌம்ய |
| பிரமோதூத | விக்ருதி | ஸாதாரண |
| பிரசோத்பத்தி | கர | விரோதிகிருது |
| ஆங்கிரஸ | நந்தன | பரீதாபி |
| ஸ்ரீமுக | விஜய | பிரமாதீச |
| பவ | ஜய | ஆனந்த |
| யுவ | மன்மத | ராக்ஷஸ |
| தாது | துன்முகி | நள |
| ஈஸ்வர | ஹேவிளம்பி | பிங்கள |
| பஹுதான்ய | விளம்பி | காளயுக்தி |
| பிரமாதி | விகாரி | ஸித்தார்த்தி |
| விக்கிரம | சார்வரி | ரௌத்திரி |
| விஷு | பிலவ | துன்மதி |
| சித்திரபானு | சுபகிருது | துந்துபி |
| ஸுபானு | சோபகிருது | ருத்ரோத்காரி |
| தாரண | குரோதி | ரக்தாக்ஷி |
| பார்த்திப | விசுவாவஸு | குரோதன |
| விய | பராபவ | அக்ஷய |